# 3 கரிகால் வளவன் கதை

## பிறக்கும் போதே அரசனானவன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தைச் சேரர், சோழர், பாண்டிய என்னும் மூவேந்தர்கள் ஆண்டார்கள். அவர்களால் ஆளப்பட்ட பகுதிகள் முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று அழைக்கப்பட்டன. இம் மூன்று நாடுகளும் சேர்ந்ததே அக்காலத்துத் தமிழகம்.

சோழ நாடு என்பது, இன்றுள்ள தஞ்சை, திருச்சி மாவட்டங்களைக் கொண்ட நாடு. இந்தச் சோழ நாட்டின் தலைநகரமாகக் கருவூர், உறையூர் காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்கள் விளங்கின. சோழ நாட்டை ஆண்ட சோழர், சூரிய குலத்தைச் சார்ந்தவர்.

சோழர்களுக்கு, வளவர், சென்னி, கிள்ளி, செம்பியன் முதலிய வேறு பெயர்கள் உண்டு.

சோழ மன்னர்கள் புகழ்பெற்றவர்கள். ஒரு புறாவுக்காகத் தன் உடலை அரிந்துகொடுத்த சிபி ஒரு சோழ மன்னர். மகனுடைய தேர்க்காலில் பட்டு இறந்த கன்றினுக்காகத் தன் மகன் மீது தேரை ஏற்றிக் கொன்ற மனு ஒரு சோழ மன்னன். இம் மன்னர் மரபில் வந்தவனே கரிகாலன்.

கரிகாலனின் தந்தையை இளஞ்சேட்சென்னி என்று அழைப்பார்கள். உருவம் என்றால் அழகு என்று பொருள். அழகிய பல தேர்களைப் பெற்றிருந்தவன் இந்த மன்னன். இவன் அழுந்தூர் என்னும் குறுநிலத்துக்கு மன்னனான வேள் ஒருவனுடைய மகளைத் திருமணம் செய்து கொண்டான். உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தான்.

கரிகாலன் கருவுற்றுப் பிறப்பதற்கு முன்னரே அவனுடைய தந்தை இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான். எனவே, அவன் பிறக்கும்போதே அரசனாகிவிட்டான். அதனால் ‘தாய் வயிற்றில் இருந்தபோதே அரசுரிமை அடைந்தவன் கரிகாலன்’ என்று புலவர்கள் குறிப்பிட்டார்கள்.

## சிறைப்பட்ட கரிகாலன்

சிறுவன் கரிகாலன் அரசனாக ஆள்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் சூழ்ச்சி செய்து உறையூர் அரண்மனையிலிருந்து கரிகாலனை விரட்டினார்கள். நாடாள வேண்டிய கரிகாலன் நாடோடியானான். பல ஊர்களில் சுற்றித் திரிந்தான். பகைவர்களின் கையில் அகப்படாமல் அவன் மறைந்து வாழ்ந்தான். இறுதியில் கருவூரில் தங்கினான்.

சோழநாடு அரசன் இல்லாமல் அவதியுற்றது. சான்றோர்கள் சிலர் இக்குறை நீக்க முயன்றார்கள். பட்டத்திற்குரிய கரிகாலன் இருக்கும் இடம் அச்சான்றோர்களுக்குத் தெரியவில்லை. அவன் உயிருடன் இருக்கின்றானா, இல்லையா என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அதனால் அவர்கள், புதிய அரசனைத் தேர்ந்தெடுக்க முயன்றார்கள்.

பழங்காலத்தில் முறைப்படி அரசராக வேண்டியவர் யாருமில்லாவிட்டால், பட்டத்து யானையைக் கொண்டு ஓர் அரசனைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த யானையை அலங்கரித்து அதன் கையில் ஒரு மாலையைக்கொடுப்பார்கள். பிறகு, அதனைத் தன்னிச்சையாகச் செல்ல விடுவார்கள், யானையின் பின்னே வீரர்களும் அரசவை அதிகாரிகளும் செல்வார்கள். யானை யார் கழுத்தில் மாலை இடுகிறதோ, அவரையே மக்கள் அரசராக ஏற்று முடிசூட்டுவார்கள்.

சான்றோர்கள் இந்தப் பழைய முறையைப் பின் பற்றினார்கள். சோழ மன்னனின் பட்டத்து யானை கழுமலம் என்னும் சீர்காழியில் கட்டப்பட்டிருந்தது. அதன் கையில் ஒரு மாலையைக்கொடுத்தார்கள்; பிறகு அதன் கட்டை அவிழ்த்துவிட்டார்கள். யானை மாலையுடன் வெளிக்கிளம்பியது.

அரசனாக வேண்டுமென்று விரும்பியவர்கள் யானையின் முன்னேபோய் நின்றார்கள். ‘யானை தம் கழுத்தில் மாலை போடாதா?’ என்று ஒவ்வொருவரும் ஏங்கினார்கள், யானை அவர்களையெல்லாம் பொருட்படுத்தாமல் கழுமலத்தைக் கடந்து சென்றது; நேரே கருவூருக்குச் சென்றது. பகைவர் கண்ணில் படாமல் மறைந்து வாழ்ந்த கரிகாலன் முன்போய் நின்றது. அவன் கழுத்தில் மாலையிட்டது. அவனைத் துதிக்கையால் தூக்கித் தன் முதுகில் அமரச் செய்தது. அவனோடு அரண்மனைக்குத் திரும்பியது.

யானையால் தேர்ந்தெடுக்கப்பட்டவன், இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலன் என்பதைக் கண்ட சான்றோர்கள் களிப்படைந்தார்கள். முறைப்படி அரியணைக்கு உரியவனையே யானை தேர்தெடுத்தது தெய்வச்செயல் என்று மகிழ்ந்தார்கள். கரிகாலனை அரியணையில் அமர்த்தி முடி சூட்டினார்கள் கரிகாலன் மீண்டும் அரண்மனையில் ஆட்சிபுரியத் தொடங்கினான்.

முன்பு கரிகாலனை விரட்டிய பகைவர்கள் இப்போதும் சும்மாயிருக்கவில்லை. தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் தங்களுடன் போதுமான வீரர்களைச் சேர்த்துக்கொண்டார்கள். பிறகு திடீரென்று ஒரு நாள் கரிகாலனைச் சூழ்ந்து, அவனைக் கைது செய்தார்கள்: அரண்மனைக்குள்ளேயே ஒரு சிறையில் அடைத்து வைத்தார்கள். சிறையில் கரிகாலன் இருப்பது கூட அவர்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால் கரிகாலனை அழிக்க அவன் இருந்த சிறைக்கே தீ வைத்தார்கள்.

சிறையிலிருந்தாலும் கரிகாலனின் வீரம் குறையவில்லை, சிறுவன் கரிகாலன் வீரம் பெற்றவனாக இருந்தான்; அச்சமற்றவனாக இருந்தான். அதனால் பகைவர் வைத்த தீ பல பக்கங்களிலும் பரவிவருவதைக் கண்டு பயப்படவில்லை.

யானையைப் பிடிக்க நிலத்தில் ஒரு பெரிய பள்ளம் தோண்டுவார்கள். அந்தப் பள்ளத்தின்மேலே மூங்கில் கம்புகளை வைப்பார்கள், அதற்கும் மேலே இலை, கிளைகளைப் பரப்பிவிடுவார்கள். அதனால் பள்ளம் கண்ணுக்குத் தெரியாது. அந்த வழியே வரும் யானை பள்ளத்தை உணராமல், அந்த இடத்தில் காலை வைக்கும். உடனே மூங்கில் முறிய, யானை பள்ளத்தில் விழுந்து விடும். பள்ளத்தில் வீழ்ந்தது, பூனையா? இல்லை: அது யானை; உறுதியான தந்தங்கள் பெற்ற ஆண் யானை, அதனால் யானை அஞ்சாது, தன் தந்தங்களால் பள்ளத்தின் ஒரு பக்கத்தை இடித்துக் தகர்க்கும்; மண் சரிந்து விழுந்தபின்; அந்த வழியே மலைச்சரிவில் ஏறிப்போவது போல ஏறி வெளியே வந்துவிடும். கரிகாலன் அந்த யானையைப் போலச் செயல்பட்டான். எரிந்த பகுதி வழியே புகுந்து, தடுத்த பகுதியைத் தகர்த்து வெளியே வந்துவிட்டான்.

கரிகாலனைக் கொல்லப் பகைவர் வைத்த தீ, அவன் விடுதலைபெற்று வெளிவரவே துணைசெய்தது. ஆனால் கரிகாலனின் கால்மட்டும் தீயினால் தீய்ந்து கருகியது, அதன்பின்பே அவன் கரிகாலன் என்ற பெயரைப் பெற்றான்.

கரிகாலனின் தாயாருக்கு ஒரு தமையன் இருந்தார். அவர் பெயர் இரும்பிடர்த் தலையார். சிறையிலிருந்து வெளிவந்த கரிகாலன் அம் மாமனாரிடம் சென்றான். அவர் துணையோடும், தன்னை விரும்பிய வீரர்களின் துணையோடும் கரிகாலன் தன் பகைவர்களோடு போரிட்டான். தன் அரண்மனைக்குள் இருந்து அவனை ஒழிக்கச் சூழ்ச்சிசெய்த அனைவரையும் அழித்து வெற்றி பெற்றான்.

மூன்றாம் முறையாகக் கரிகாலன் அரியணையில் அமர்ந்து ஆட்சிசெய்யத் தொடங்கினான். அவனுடைய மாமனார் இரும்பிடர்த் தலையார் அவனருகே இருந்து பலவகையிலும் அவனுக்குத் துணைசெய்தார். அதன் பின் கரிகாலன் ஆட்சி குறையின்றிச் சிறந்து விளங்கியது.

## பிள்ளை வழங்கிய நல்ல தீர்ப்பு

கரிகாலன் சிறுவன் ‘கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது’. என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தான். இளமையில் ஊர் ஊராகத் திரிந்தபோது பல்வகைப்பட்ட மக்களைக் கண்டு பழகிய அனுபவம் மக்கள் நிலையை அவனுக்கு நன்கு உணர்த்தியது. அதனால் மக்களின் மனம் கோணாமல், அவர்கள் முகம் மலர அகம் குளிர ஆட்சி செய்தான்.

ஒரு நாள் கரிகாலன் தன் அவையில் வீற்றிருந்த போது இருவர் வந்தனர். அந்த இருவருக்குமிடையே ஒரு வழக்கு இருந்தது. அந்த வழக்கை அரசனிடம் கூறி, அவன் கூறும் தீர்ப்பை ஏற்பதற்காக வந்திருந்தனர். அவர்கள் வந்த நோக்கத்தை அறிந்து கொண்ட கரிகாலன் “ உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்” என்று கூறினான்.

வந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றார்கள். எவரும் வாய்திறந்து வழக்கைச் சொல்ல முன்வரவில்லை. அவர்கள் வழக்குரைக்கத் தயங்கினர்.“அரசன் இளையவனாக இருக்கின்றானே இவனால் நல்ல தீர்ப்பு வழங்கமுடியுமா” என்று இருவரும் ஐயங்கொண்டனர்.

வந்தவர் வழக்கினைக் கூறத் தயங்கியதன் காரணத்தை ஊகித்து உணர்ந்த கரிகாலன் “பெரியோர்களே! இளையவனான என்னால் வழக்கை நல்லமுறையில் கேட்டுத் தீர்ப்பளிக்கமுடியுமா?” என்று எண்ணுகிறீர்கள். உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். அரண்மனையில் உள்ள அனுபவமிக்க முதியவர் ஒருவரை அனுப்புகிறேன். அவர் உங்களுக்குத் தீர்ப்பு வழங்குவார்” என்று கூறி அரசவையை விட்டு வெளியேறினான்.

சிறிது நேரத்திற்குப் பின்பு முதியவர் ஒருவர் அவைக்கு வந்தார். வயதானதால் வளைந்து கூன் பெற்ற உருவம்; நரைத்த தலை; தாடி; ஊன்றி நடக்க ஒரு கோல் இத்தனையும் பெற்ற அந்த முதியவரைக் கண்டு வழக்காட வந்தவர்கள் திருப்தி அடைந்தார்கள். அவரிடம் தம் வழக்கைச் சொன்னார்கள்.

முதியவர் இருவரிடமும் வழக்கைக் கேட்டார். பிறகு தீர்ப்பு வழங்கினார். அந்தத் தீர்ப்புச் சரியானது என்று இருவருமே ஏற்றுக்கொண்டனர். அவர்கள், தீர்ப்பு வழங்கிய முதியவரைப் புகழ்ந்தார்கள்.

முதியவர் முறுவல் செய்தபடி தம் தலையில் இருந்த நரைமுடியை ஒரு கையால் அகற்றினார்; மறு கையால் தாடியை நீக்கினார். அங்கே சிறுவன் கரிகாலன் சிரித்தபடி நின்றிருந்தான்.

வழக்காட வந்தவர்கள் வியப்புற்று நின்றார்கள். கரிகாலனே நரைமுடி அணிந்து, தாடிசூடி முதியவர் வடிவத்தில் வந்ததை அறிந்த அவையினர் அத்தனை பேரும் வியந்தனர்.

''நல்ல தீர்ப்பு வழங்க இந்தப் பிள்ளையால் முடியுமா? என்று ஐயுற்ற இருவரும், அதே சிறு பிள்ளையான கரிகாலனே தமக்குச் சிறந்த தீர்ப்பை வழங்கியதை அறிந்தனர். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்பதனை உணர்ந்தனர். உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்ற வள்ளுவர் வாக்கு எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்தனர். நரை முடியணிந்து தீர்ப்பு வழங்கிய கரிகாலனுக்கு நன்றி கூறிச் சென்றனர்.

**நன்றி :- சிறுவர்க்கு மூவேந்தர் கதை**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அரியணை | - | அரசர்கள் வீற்றிருக்கும் சிம்மாசனம் |
| முறுவல் | - | புன்னகை. மகிழ்ச்சி |
| கீர்த்தி | - | புகழ் |
| உருவு | - | வடிவம் |
| எள்ளல் | - | இகழ்ச்சி |
| மூர்த்தி | - | கடவுளின் உருவம் |

## கிரகித்தல் பயிற்சி

1. *தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் யாவர்?*
2. *"கரிகாலன்" என்ற பெயர் வரக் காரணம் யாது?*
3. *பழங்காலத்தில் மக்கள் அரசர்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்.*
4. *"தாய் வயிற்றில் இருந்த போதே அரசுரிமை அடைந்தவன் கரிகாலன்" எனப் புலவர்கள் கூறக் காரணம் யாது?*
5. *"கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது" என்ற பழமொழி உணர்த்தும் கருத்து யாது?*
6. *"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்பதன் பொருளை விளக்குக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

*1. கரிகாலனின் ஆட்சிச் சிறப்பு எனும் தலைப்பில் மேடைப் பேச்சு ஒன்றை நிகழ்த்துக.*

*2. கரிகால் வளவனின் கதையை நாடக வடிவில் எழுதுக. பின் அதை வகுப்பறையில் அல்லது இலக்கிய மன்றத்தில் நடித்துக் காட்டுக.*

*3. ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதில் பண்டைய முறைமைக்கும் தற்கால முறைமைக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கட்டுரையாக எழுதுக.*

*4. இலங்கையில் வாழ்ந்த சிறப்புமிக்க மன்னர்கள் தொடர்பான கதைகளைச் சேகரித்து, கதைப் புத்தகம் ஒன்றை ஆக்குக.*

## மொழி வளம்

### மரபுப் பெயர்கள்

எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு ஆன்றோர் தொன்று தொட்டு வழங்கி வந்தனரோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும். இவை தமிழ்மொழியில் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் மிகையாக கையாளப்பட்டு வருகின்றன.

### இளமைப் பெயர்

| | | |
|---|---|---|
| கன்று | - | தென்னை, யானை,மான், வாழை, பசு, எருமை. |
| குட்டி | - | ஆடு, புலி, குதிரை, பாம்பு, வாழை, குரங்கு, பூனை, யானை , சிங்கம், நாய், மான். |
| குருளை | - | சிங்கம், நாய், புலி. |
| பறள் | - | குரங்கு, பூனை, பன்றி. |
| பிள்ளை | - | கீரி, அணில், கிளி, கமுகு, தென்னை. |
| மறி | - | ஆடு, குதிரை, புள்ளிமான் |
| குஞ்சு | - | அணில், மீன், கோழி, கிளி |
| பேத்தை | - | தவளை |
| பனை | - | வடலி |
| புகையிலை | - | நாற்று |
| போதகம் | - | யானை |

## கூட்டத்தை குறிக்கும் மரபுச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆடு | - | மந்தை |
| 2. | ஆ | - | நிரை |
| 3. | பல் | - | வரிசை |
| 4. | கல் | - | குவியல் |
| 5. | மலர் | - | கொத்து |
| 6. | கடை | - | தொகுதி |
| 7. | ஆறு | - | தொகுதி |
| 8. | சனம் | - | திரள் |
| 9. | நெல் | - | குவியல் |
| 10. | வாழை | - | தோப்பு |

## சினைப்பெயர்

### I இலைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மா, பலா, வாழை | - | இலை |
| 2. | தென்னை, பனை, கமுகு | - | ஓலை |
| 3. | நெல், புல் | - | தாள் |
| 4. | கரும்பு, சோளம் | - | தோகை |

### II வித்துப் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 1. | மிளகாய், கத்தரி, | - | விதை |
| 2. | நெல், சோளம், தினை | - | மணி |
| 3. | ஆமணக்கு, மாதுளை | - | முத்து |
| 4. | மா, பலா, தாமரை | - | கொட்டை |
| 5. | தாமரை, ஆமணக்கு | - | பொகுட்டு |

### III இளங்காயின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 1. | தென்னையின் இளங்காய் | - | குரும்பை |
| 2. | பனையின் இளங்காய் | - | நுங்கு |
| 3. | பலாவின் பிஞ்சு | - | மூசு |
| 4. | மாவின் இளம் பிஞ்சு | - | வடு |
| 5. | வாழையின் இளம் பிஞ்சு | - | கச்சல் |

### IV உள்ளீட்டுப் பெயர்

| | | |
|---|---|---|
| அரிசி | - | நெல், தினை, வரகு |
| சதை | - | வாழை, மா |
| சுளை | - | பலா, தோடை |
| சோறு | - | முருங்கை, கற்றாளை |
| பருப்பு | - | அவரை |

### V குலைக்குரிய மரபுப்பெயர்

| | | |
|---|---|---|
| 1. வாழை, முந்திரி, ஈச்சை | - | குலை |
| 2. மா, புளி முதலியவற்றின் காய்த்தொகுதி | - | கொத்து |
| 3. சோளம், நெல், வரகு | - | கதிர் |

### VI ஏனைய மரபுப்பெயர்

| | | |
|---|---|---|
| 1. ஆட்டுமலம் | - | பிழுக்கை |
| 2. கழுதை மலம் | - | விட்டை |
| 3. பறவை மலம் | - | எச்சம் |
| 4. யானை மலம் | - | இலத்தி / இலண்டம் |
| 5. பசு | - | சாணம் |

### VII அஃறிணை மரபுப்பெயர்

| **ஆண்** | **பெண்** |
|---|---|
| களிறு | பிடி |
| சேவல் | பெட்டை / பேடு |
| கடுவன் | மந்தி |
| எருது | பசு |
| போத்து | பிணா |
| கலை | பிணை |
| கிடாய் | பெட்டை |
| மயில் | அளகு |
| இரலை | மரை |
| பன்றி | பிணா |

**பயிற்சி**

*இவை போன்ற வேறு மரபுப் பெயர்களைச் சேகரியுங்கள். மரபுப் பெயர் கைந்நூல் ஒன்றினைத் தயாரியுங்கள்.*

## இலக்கணம்

### பெயர்ச்சொல்

யாழினி, நிலா, பச்சை, கோபம், மலர்
பொறிகள், கொழும்பு, பாலன், மன்னார்,
படித்தல், படம், வட்டம், பறவை,

மேல்வரும் சொற்களில் நபர்களின் பெயர்கள் பொருளின் பெயர்கள், நிறத்தின் பெயர்கள், இடத்தின் பெயர்கள், பண்பின் பெயர்கள் என்பன இடம் பெற்றுள்ளன.

எனவே,

**பெயர்ச் சொல் என்பது ஏதாவது ஒன்றின் பெயரை குறிப்பது.**

பெயர்ச்சொற்கள் சில தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளன, என்பதை தரம் 7 இல் நீங்கள் கற்றிருக்கிறீர்கள். அவற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. பெயர்ச்சொற்களின் முக்கியபண்பு வேற்றுமை உருபை ஏற்பது.

ஐ, ஆல், கு, இன், இல், அது, கண் போன்றன வேற்றுமை உருபுகளாகும்.
ஓவியன் - என்ற பெயர்ச்சொல் வேற்றுமை உருபுகளை ஏற்று பின்வருமாறு வரும்

- ஓவிய **னை**
- ஓவியனா **ல்**
- ஓவியனுக் **கு**
- ஓவிய **னில்**
- ஓவிய **னின்**
- ஓவிய **னது**
- ஓவியன் **கண்**
- ஓவிய **னே**

2. பெயர்ச்சொற்கள் பெயரடைகளை ஏற்கும்
நல்ல, புதிய, பெரிய, சிறந்த, என்ற அடைகளை பெயர்ச்சொல் ஏற்கும்.
உதாரணமாக - மனிதன் என்ற பெயர்ச்சொல்

- நல்ல மனிதன்
- புதிய மனிதன்
- பெரிய மனிதன்
- சிறந்த மனிதன்

என பெயரடைகள் ஏற்று வரும்

3. பெயர்ச்சொற்கள் **எண், சுட்டு, வினா** அடைகளை ஏற்று வரும்.

- **எண் அடைகள்** - ஒரு வீடு, முக்கண், அறுசுவை, ஐந்திணை
- **சுட்டு அடைகள்** - அந்த நடிகன், இந்தப் பெண்
- **வினா அடைகள்** - எத்தகைய ஓவியம், எந்தப் பையன்

4. பெயர்ச்சொற்கள் பொதுவாக **ஆக**, **ஆகி** என்ற விகுதிகளைப் பெறும்.

- ஆகி - புயலாகி, கதையாகி
- ஆக - தெய்வமாக, அறிவாக

தரம் 7 இல் பெயர்ச் சொற்களின் வகைகள் பற்றி கற்றுள்ளீர்கள். அவற்றை மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

### பெயர்ச் சொல்லின் வகைகள்

- பொருட்பெயர் - கல், மண், குடம்
- இடப்பெயர் - கொழும்பு, மன்னார், கண்டி
- காலப்பெயர் - மார்கழி, சித்திரை
- சினைப்பெயர் - மலர், இலை, காய்
- குணப்பெயர் - நீலம், மஞ்சள், கோபம்
- தொழிற்பெயர் - பொரியல், ஓடுதல், அவியல்

- பொதுவில் பெயர்ச் சொற்கள்
  - ஏதாவது ஒரு பொருளின் பெயரை
  - ஏதாவது ஒரு இடத்தின் பெயரை
  - பகல், இரவு, கிழமை, மாதம், வருடம் போன்ற காலத்தை
  - முழுமையின் பகுதிகளை
  - வடிவம், நிறம், குணம் ஆகியவற்றை
  - தொழிலைக் குறிப்பதாக அமையும்.

பின்வரும் அட்டவணையை மாதிரியாகக் கொண்டு ஒவ்வொரு வகைப் பெயர்ச் சொற்களுக்கும் பத்துப் பத்து உதாரணங்களை எழுதுங்கள்.

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

குறிப்பு :- வினாக்களுக்கான விடைகளை பாடநூலில் எழுதுவதைத் தவிர்க்கவும்.